செய்தி வெளியீடு **நாள்: 04.03.2026**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள வால்டாக்ஸ் சாலையில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம், 700 அடுக்குமாடி "முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்", முதல்வர் விளையாட்டுத் திடல், மாநகராட்சி அச்சகம் மற்றும் முதல்வர் திருமண மாளிகை என "ஒருங்கிணைந்த வளாகம்" இறுதிக் கட்டப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள துறைமுகம் சட்டமன்ற தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெருவில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் **இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம்**, 700 அடுக்குமாடி **"முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்", முதல்வர் விளையாட்டுத் திடல், மாநகராட்சி அச்சகம்** மற்றும் **முதல்வர் திருமண மாளிகை** என **"ஒருங்கிணைந்த வளாகம்"** இறுதிக் கட்டப் பணிகளை இன்று (04.03.2026) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

இதற்கு முன்னர், **மாண்புமிகு அமைச்சர் அவர்கள்** கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு-69, சோமயா தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் **நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம்**, வார்டு-67, பெரம்பூர் வீனஸ் தியேட்டர் அருகில் கட்டப்பட்டு வரும் **மாநகராட்சி அலுவலகக் கட்டடம்** கட்டுமானப் பணிகள் மற்றும் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கர் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் **ஆடுதொட்டி புச்சர் கிரவுண்ட்** கட்டுமானப் பணிகளை நேரில் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தி, அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா,இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி.ஸ்ரேயா பி.சிங், இ.ஆ.ப., சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் திரு.சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், மண்டலக் குழுத் தலைவர்கள் திரு.பி.ஸ்ரீராமுலு, திருமதி.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன்பாபு மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™